செ.வெ.எண்:70 நாள்:30.07.2019

# கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி வட்டம் அரசம்பட்டி, பென்டரஅள்ளி கிராமத்தில் 18 நீர் வள ஆதாரதுறையின் மூலம் ரூ.18 கோடியே 8 இலட்சம் மதிப்பில் தடுப்பணை அமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சு.பிரபாகர்,இ.ஆ.ப. அவர்கள் இன்று (30.07.2019) செய்தியாளர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 10.12.2018 மற்றும் 19.02.2019 ஆகிய தேதிகளில் நீர்வள ஆதாரத்துறை சார்பாக தடுப்பணை அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி வட்டம், பாரூர் கிராமம் அரசம்பட்டி மற்றும் பென்டரஅள்ளி கிராமம் அருகில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே நிலத்தடி நீர் செரிவூட்டம் திட்டத்தின் கீழ் 2 தடுப்பணைகள் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு ரூ.18 கோடியே 8 இலட்சம் மதிப்பில் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் செய்தியாளர்களுடன் பார்வையிட்டார்.

**செய்தியாளர்கள் பயணத்தின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவிக்கும் போது:**

கிருஷ்ணகிரி மாவட்டம் பாரூர் கிராமம் அரசம்பட்டியில் ரூ 8 கோடியே 84 இலட்சம் மதிப்பில் தடுப்பணை கட்டப்படுகிறது. இந்த தடுப்பணையின் நீளம் 145 மீட்டர், உயரம் 1.50 மீட்டர் மற்றும் 5.21 மில்லியன் கனஅடி தண்ணீரை சேமிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இத்தடுப்பணை மூலம் பாரூர், அரசம்பட்டி மற்றும் பன்னந்தூர் ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள 84 பாசன கிணறுகள் மூலம் நிலத்தடி நீர் உயர்த்தப்பட்டு 508 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும். மேலும் இந்த தடுப்பணையை சுற்றி 6 கூட்டு குடிநீர் திட்ட கிணறுகள் மூலம் 224 கிராமங்களிலுள்ள சுமார் 50,000 மக்களுக்கு நிரந்தரமாக குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோல பென்டரஅள்ளி கிராமத்தில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே ரூ 9 கோடியே 24 இலட்சம் மதிப்பில் தடுப்பணை கட்டப்படுகிறது. தடுப்பணையின் நீளம் 145 மீட்டர், உயரம் 1.50 மீட்டர் மற்றும் 3.56 மில்லியன் கனஅடி தண்ணீரை சேமிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இத்தடுப்பணை மூலம் பென்டரஅள்ளி, கால்சானூர், கொங்கரப்பட்டி, கருவேலம்பட்டி மற்றும் இருமத்தூர் ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள 34 பாசன கிணறுகள் மூலம் நிலத்தடி நீர் மட்டம் உயர்த்தப்பட்டு 1107 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும். மேலும் இந்த தடுப்பணையை சுற்றி அமைந்துள்ள 2 ஆழ்துளை கிணறுகளின் மூலம் 3 கிராமங்களிலுள்ள சுமார் 10,000 மக்களுக்கு நிரந்தரமாக குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்விரண்டு தடுப்பணைகளுக்கான 90 சதவிகித பணிகள் முடிந்துள்ளது. ஆகஸ்ட் 2019 க்குள் பணியினை முழுமையாக முடித்து பொதுமக்கள் மற்றும் விவசாய நிலத்திற்கும் தண்ணீர் கிடைக்கும் வகையில் நிலத்தடி நீரை உயர்த்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் பொதுமக்கள் தொண்டு நிறுவனங்கள், தனியார் அமைப்புகள் மூலம் 150 ___ மேற்பட்ட ஏரிகள் தூர் வாரும் பணிகள் நடைபெற்று வருகிறது. ஏரிகளுக்கு வரும் நீர்வரத்து கால்வாய், நீர் வெளியேற்றும் கால்வாய் தூர் வாரும் பணிகள் நடைபெறுகிறது. பொதுப்பணித்துறை நீர் வள நில வளத்திட்டத்தின் கீழ் தளிஅள்ளி கிராமத்தில் ரூ. 50 லட்சம் மதிப்பில் நீர் வரத்து கால்வாய் கட்டி முடிக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

தொடர்ந்து பிரதம மந்திரி கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே ரூ.6 கோடியே 80 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் பென்டரஅள்ளி - கம்பைநல்லூர் மேம்பாலத்தை பார்வையிட்டார்.

இந்த ஆய்வின்போது பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் திரு.சரவணகுமார், உதவி பொறியாளர் திரு.முருகேசன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.சேகா போச்சம்பள்ளி வட்டாட்சியர்

திரு.மு.முனுசாமி, வருவாய் ஆய்வாளர் திரு.செல்வராஜ், கிராம நிர்வாக அலுவலர் திரு.தேன்மொழி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சு.மோகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கிருஷ்ணகிரி.**